மலைவாழ் மக்கள் நலனைக் கருதி இந்த பகுதியினருக்கு 'மொபைல் வெட்ரினரி டிஸ்பென்சரியை' ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் வட்டத்தில் ஏற்கெனவே இரண்டு நடமாடும் கால்நடை மருந்தகங்கள் செயல் பட்டு வருகிற காரணத்தால் ஆத்தூரில் மேலும் ஒரு நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க தற்சமயம் வாய்ப்பு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக் கப்படுகிறது.

வினா எண் 569—திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

569—

கிருட்டிணகிரி பால்பண்ணை.

*6064—திரு. கே. முனிவெங்கடப்பன் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா ககளுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருட்டிணகிரி பால்பண்ணையில் தயாரிக்கப்படும் பால்பவுடர், நெய், வெண்ணெய் ஓர் ஆண்டுக்கு எவ்வளவு ?

(ஆ) இவைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றனவா?

(இ) இவைகளை விற்று பால் உற்பத்தியாளர்களுக்கு தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(அ) 1991–92—ஆம் ஆண்டில் பால் பொருட்களின் உற்பத்தி விபரம் :

பால் துகள்	..	3,70,293 கிலோ
வெண்ணெய்	..	6,72,450 கிலோ
நெய்	..	1,64,595 கிலோ

(ஆ) இல்லை.

(இ) இவற்றின் மூலம் கிடைக்கும் தொகையைக் கொண்டு பால் உற்பத்தியாளர்களுக்கு, பால் பண பட்டுவாடா செய்வதுடன், நிலுவைத் தொகை அனைத்தும் தற்போது வழங்கப்பட்டுவிட்டது.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே சிறந்த நெய், வெண்ணெய் உற்பத்தி செய்யும் பால் பண்ணையாக இந்த பால்பண்ணை விளங்குகிறது. ஆகவே, இதை விஸ்தரிக்கும் எண்ணம் நமது அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் இது விஸ்தரிக்கப்படும்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச்சாராயத்தை ஒழித்து சாதனை படைத்த புரட்சி புனிதத் தாய், விடுதலைப் புலிகளை ஒழித்த வீரத்தாய், கல்வியிலே பல புதுத் திட்டங்களைத் தீட்டிய காவியத் தாய், வெண்மைப் புரட்சியிலே சாதனைகளைப் படைத்து, இன்றைக்கு ஏழை எளிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகின்ற புரட்சித் தலைவியின் ஆட்சியில் இந்த வெண்மைப் புரட்சியிலே பங்கு கொண்டிருக்கின்ற ஏழை விவசாய மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் வகையிலே இந்த பால் கொள்முதல் விலையை உயர்த்தித்தர நமது அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைய தினம் இந்தத் துறையின் மானியக் கோரிக்கை இருக்கின்ற காரணத்தினால் அப்போது இதுபற்றித் தெரிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10-30

2. அறிவிப்பு.

பேரவைக்குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு, சென்ற ஒரு வாரம் முழுவதும் பேரவைக்கு விடுமுறை அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து பேரவைக் குழுக்களின் தேர்தலுக்கான நிகழ்ச்சி நிரல் கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது :

ஒற்றை வாக்குமுறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ் மதிப் பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, உரிமைக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர் களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத் தாளை 1992—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22—ஆம் நாள் புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செய லாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாளைச் செயலாள ரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள் 1992—ஆம் ஆண்டு ஏப்ரல் 23—ஆம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1992—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24—ஆம் நாள் வெள்ளி கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம். நியமனம் செய்யப்படும் வேட்பாளர்கள் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண் டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் குழு உறுப் பினர்களைத் தேர்ந்தெடுக்கப்படும் நாள் பின்னர் அறிவிக்கப் படும்.